முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 09.03.2026,அ.வ.எண்.76/2012, வா.சா.3.முருகவேல், த/பெ.கிருஷ்ணசாமி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி சண்முகம்அழைத்ததின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.  சண்முகம் எனக்கு உறவினர் என்றால் சரியல்ல., ஒரே சமூகம், ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு 4 தடவை வந்துள்ளேன் மேற்படி 4 முறையும் என்னை வாதி சண்முகம் தான் அழைத்து வந்தார் என்றால் இல்லை நான் தான் வந்தேன். இந்த தேதியில் வாய்தா உள்ளது என்று யார் சொன்னது என்றால் வாதியின் வழக்கறிஞர் சொன்னார்.

2) வாதி சண்முகத்திற்கு எத்தனை ஏக்கர் பூமி என்றால்  சுமார் 10–12 ஏக்கர் இருக்கும். காலை எண் தெரியுமா என்றால் தெரியாது. 96 என்ற காலை தெரியும் மற்ற காலை எண்கள் தெரியாது. 96 காலை எண்ணில் எத்தனை ஏக்கர் உள்ளது என்றால் சுமார் 3 1/2 ஏக்கர் இருக்கும்.  வா சா ஆ 5 சிட்டா வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சிட்டாவில் எத்தனை க.ச.எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 88/பி1, 89/ஏ3, 89/பி1ஏ, 89/பி2ஏ, 90/1, 90/2, 90/3, 90/4, 94/1பி1, 94/1பி2, 95/1சி1, 95/1சி2, 96/2 ஆகிய காலை எண்கள் உள்ளன.

3) எனது முதல் விசாரணையில் 96 ம் எண் காலைக்கு மேபுறம் ஓடை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால்  சரிதான். ஓடையை ஒட்டி மேபுறம் தார் ரோடு தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். வண்டிப்பாதை யாருடைய இடத்தில் உள்ளது என்றால் நத்தத்தில் உள்ளது. யார் பெயரில் உள்ளது என்றால்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல்  நீதிபதி,
பொள்ளாச்சி

தற்போது பரமசிவம் பெயரில் உள்ளது. பரமசிவம் யார் என்றால் 2 ம் பிரதிவாதி ஜெயக்குமாரின் அப்பா ஆவார். பூமிக்கு மேபுறம் ஓடை உள்ளது அதை ஒட்டிதார் ரோடு செல்கிறது என்று எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை வாதிகளுக்கு நேரடியாக தார் ரோட்டிலிருந்து தடம் உள்ளது குறித்து நான் கூறவில்லை என்றால் ஞாபகமில்லை.

4) தார் ரோட்டிலிருந்து வரும்தடத்தை மறைத்து பிரதிவாதிகளின் தடத்தை அபகரிப்பதற்காக வாதிகளோடு சேர்ந்து பொய் சாட்சியம் அளிக்கும் விருப்புறு சாட்சி என்றால் சரியல்ல, அதனால் எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி